முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1280

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.04.2023, சனிக்கிழமை

1. அறமாக வாழுகின்ற அண்ணலே
ஆன்மீக ஞான அரசியல் களம்
வரமாக மக்களுக்கு அருளி
வையகத்தில் ஞான ஆட்சிநிறுவ
2. நிறுவவே அவதாரம் புரிந்த
ஞான தேசிகனே அரங்கனே
ஆறுமுகன் யான் உந்தனுக்கு ஞானஅறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 18 ம் நாள், 01.04.2023, சனிக்கிழமை)
அருளுவேன் அரங்கனுக்கு சக்திப்பெருக
3. பெருகவே சுபகிருது சேல் திங்கள் பிசகின்றி இவை ஆசி உரைப்பேன்
தர்மபலம் பெருக்கிவரும் அரங்கனே தான்உன்வழி தொண்டர்படை இனிதே பெருகி
வறுமையில்லா நல்லுலகமாகி இனிதே
வளங்கள் கூடி இந்த வையகம்
4. வையகம் ஞானவான்கள் சூழ
வல்லமையான ஞான ஆட்சியைக் காணும்
பெருமைபட மக்களிடை தர்மபலம்
பிசகின்றி வளர்ந்து சிறந்து
5. சிறந்துமே ஞானியர்கள் வெளிப்படும்வண்ணம்
சேவைகளும் அளவிலா பெருகி
பரந்த பேருலகம் எங்கும்
பரமானந்த சக்திகள்வழி பற்றி இனிதே
6. இனிதே அரங்கன் உன் அவதார நோக்கமாக
இணையில்லாத ஞான ஆட்சி
கனிவேலவன் என் தயவோடு
கலியுகத்தில் இனிதே அரங்கேறும்

7. அரங்கேற தொண்டர் பெருமக்களை
அளவில்லா சக்தியாக பெற்ற அரங்கனே
வரமென உன்வழி அவர்களெல்லாம் தொடர்ந்து
வல்லமை பெருகிட தீட்சைபெற்று வந்தால் போதும்
8. போதுமப்பா அப்பனே அவரவர்க்கும் சக்திபெருகி ஆற்றலாக அறத்தின் பலமும்
குன்றாத வண்ணம் காப்பாக உலகில் சேவையாற்றி
கந்தவேலன் என் காட்சி கருணையோடு
இந்த கலியுகத்தில் பேரற்புதம் காண்பர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–